மரம் கவிதை

-------------------------------------------------------------

மரம் என்று ஒரு கவிதையை
காகிதத்தில் எழுதினேன்.
தொலைதூரத்துக் காடு ஒன்றில்
ஒரு மரம் வெட்டப்பட்டுக் கீழே சாயும்
ஓசை காதில் விழுந்தது.
அரிச்சுவடி புத்தகம் ஒன்று வாங்கி
அணில் ஆடு என்று
குழந்தைக்குக் கற்றுக் கொடுத்தேன்.
தின்பதற்கு மரத்தில் இலை கிடைக்காத
நகரத்து ஆடு ஒன்று
சுவரில் ஒட்டப்பட்ட போஸ்டரைக் கிழித்துத்
தின்று கொண்டிருந்தது.
ஒரு புத்தகக் கண்காட்சிக்குப் போய்
பை நிறைய புத்தகங்கள் வாங்கிக் கொண்டிருந்தேன்.
ஒரு காடு அழிக்கப்பட்டு
அக்காட்டிலுள்ள பறவைகளும் விலங்குகளும்
அலறிக் கொண்டு அகலும் காட்சி கண்ணில்
திரைப்படம் போல் ஓடியது.
மரங்கள் சுவாசித்து வெளித் தள்ளிய
மூச்சை சுவாசித்து உயிர் வாழ்கிறவன் நான்
என்பதை மனசுக்குள் நினைத்துப் பார்த்தேன்.
காட்டில் ஒரு பூ திடீரென்று மலர்ந்தது.

---- 13 அக்டோபர் 2020




